பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 11 | வியாழக்கிழமை | 26.12.2024 | அதிர்வு 146

## சவேந்திர சில்வாவின் பதவி நீடிக்கப்படுமா?

**இன்னமும் முடிவு இல்லை என்று அநுர அரசு அறிவிப்பு**



பாதுகாப்புப் படைக ளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பத விக் காலத்தை 05

# ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

## இன்று 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு மக்களிடம் கோரிக்கை

இலங்கை வரலாற்றில் மாறா வடுவாக பேரழிவை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தத்தை எதிர்கொண்டு இன்று 20 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் நாடளாவிய ரீதியில் விசேட நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூரும் வகையில் இன்று புதன்கிழமை காலை 9.25 முதல் 9.27 வரை நாடு முழுவதும் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தை 05





# இந்த அரசு கவிழும் என்று கனவில் கூட நினைக்காதீர்!

## எதிரணியினருக்குப் பிரதமர் பதிலடி

**"இது மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் மக்களால் நிறுவப்பட்ட அரசு. இது எவராலும் அசைக்க முடியாத தேசிய மக்கள் சக்தி அரசு. எனவே, இந்த அரசு கவிழும் என்று எதிரணியினர் கனவில் கூட நினைக்கக்கூடாது."**

**- இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.** 05




வடக்கு மாகாணத்தில் அதிகாரிகள் எதேச்சையாக, சர்வாதிகாரமாக, அசண்டையாகச் செயல்படுகின்றனர் என ஆளுநர் குறை கூறும்போதெல்லாம் மக்களிற்கு மட்டுமல்ல எமக்கும் ஓர் சலிப்பு ஏற்படுகின்றது.

ஆயினும் இது தொடர்பில் தேடியபோது கிணறு வெட்டப் பூதம் கிளம்புவதுபோல் தொடர்ச்சியாக பெரும் விவகாரங்கள் வெளிவருகின்றன.

வடக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஒருவர், ஐந்து, பத்தல்ல, 52 பேரை – உரிய முன் அனுமதியின்றி – தன்னிஷ்டத்திற்கு கல்வி அமைச்சில் நியமனம் வழங்கி விட்டுச் சென்றிருக்கின்றார். செயலாளர் நியமித்தார் என்ற கணக்கில் ஏனைய அதிகாரிகள் கடந்த 8 வருடங்களாக அந்த 52 பேருக்கும் சம்பளம் வழங்குகின்றனர்.

இது தொடர்பில் அங்கு உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வு பிரிவுகள் என்ன நடவடிக்கை எடுத்தனர், மேல் அதிகாரிகள் என்ன 05



# கடலில் மூழ்கி மூவர் உயிரிழப்பு

## அம்பாறையில் நேற்று துயரம்

(வடிவேல் டினேஸ்)

அம்பாறை, பொத்துவில், சங்கமன்கண்டி பகுதியினை சேர்ந்த மூவர் நேற்று மாலை கடலில் மூழ்கி உயிரிழந்துள் ளனர்.

நேற்று நத்தார் பண்டிகையினை முன்னிட்டு தாண்டியடி கடற்கரை பகுதிக்கு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் மற்றும் அவர்களது உறவு முறையினை சேர்ந்த ஒரு வருமாக மூவர் திருக்கோவில் உமிரி கடற்கரை பகுதிக்கு சென்றுள்ளனர்.

இந் நிலையில் கடலில் நீராடிய போது கடல் அலையில் அடித்து செல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த மூவரில் இரு மாணவர்கள் உள்ளடங்குகின் றனர். அவர்களில் மூவரின் சடலங்கள் இன்னும் மீட்கப்பட வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# மாமனிதர் ஜோசெப் பரராஜசிங்கத்தின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல்



மாமனிதர் ஜோசெப் பரராஜசிங்கத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள அதன் தலைமை அலுவலகத் தில் நேற்று மாலை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னராக இருந்த ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 25.12.2005 மட்டக்களப்பில் தேவாலயத்தில் பாலன்பிறப்பு வேளையில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை மிலேச்சத்தன மான முறையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அவரது 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் ஏற்பட்ட குழுவின் தலைவர் பொன்மாஸ்டர் தலைமையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பணிநீக்கப்பட்ட மின்சார சபையின் 62 பணியாளர்கள் மீண்டும் கடமையில்

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பணிநீக்கம் செய்யப்பட்ட இலங்கை மின்சார சபையின் 62 பணியாளர்களும் மீண்டும் கடமையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியின் விசேட பணிப்புரைக்கமைய அவர்கள் மீண்டும் கடமையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம், இலங்கை மின்சார சபையைத் தனியார் மயமாக்குவதற்கு எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதன் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன.

அதன்போது, மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நுகர்வோருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக, மேற்படி 62 பேரும் அப்போதைய மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவின் பணிப்புரைக்கமைய இடைநிறுத்தப்பட்டனர்.

# தேசிய பாதுகாப்பு தினம் இன்று அனுஷ்டிப்பு

சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு 20 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இன்று தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய பாதுகாப்பு தினத்திற்கு இணையான பிரதான நிகழ்வு பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரால் அருண ஜயசேகர தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதுதவிர, மாவட்ட மட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# 18 மணித்தியாலங்கள் தண்ணீர் விநியோகத் தடை

களுத்துறை தெற்கு, களுத்துறை வடக்கு, வாதுவ, வஸ்கடுவ, மொரொன்துடுவ உள்ளிட்ட பகுதிகளுக்கு 18 மணித்தியால தண்ணீர் விநியோகத்தடை அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இன்று காலை 9 மணி முதல் நாளை அதிகாலை 3 மணிவரை தண்ணீர் விநியோகத்தடை அமுல்ப்படுத்தப்படவுள்ளது.

தண்ணீர் குழாய்களில் மேற்கொள்ளப்படும் அவசர திருத்தப்பணிகள் காரணமாக இவ்வாறு தண்ணீர் விநியோகத்தடை அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.






# அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பணியாளர்களுக்கு 25,000 ரூபாய் அல்லது 20,000 ரூபாவை ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்குமாறு நிதியமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் அனைத்து அமைச்சுகளினதும் செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிதியச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு இந்த சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டில் வரிக்குப் பிந்திய இலாபத்தில் குறைந்தது 30 சதவீதத்தைக் கூட்டு நிதியத்துக்கு அல்லது வரியாகச் செலுத்திய நிறுவனங்களின் பணியாளர்களுக்கு இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஊக்குவிப்பு கொடுப்பனவுக்காக திறைசேரியினால் நிதி வழங்கப்படமாட்டாது என நிதியமைச்சு குறித்த சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், அமைச்சரவையின் விசேட அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும் என அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நலன்புரி கொடுப்பனவுகளைச் செலுத்தும் முறைமை தொடர்பில் புதிய வர்த்தமானி




எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அமுலாகும் வகையில், அஸ்வெசும திட்டத்தின் கீழ் நலன்புரி கொடுப்பனவுகளைச் செலுத்தும் முறைமை தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சராக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அஸ்வெசும தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வறிய குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 8,500 ரூபா கொடுப்பனவு, 10,000 ரூபாவாகவும், மிகவும் வறிய குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 15,000 ரூபா கொடுப்பனவு 17 ஆயிரத்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் குறித்த பிரிவினருக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 2 சமூக பிரிவினருக்கான கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

அதன்படி, ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை, பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கும், ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை நிலையற்ற பிரிவினருக்கும் 5,000 ரூபா வழங்கப்படும் என அந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கை எடுக்கப்போகின்றனர்? – தெரியவில்லை.

52 பேரையும் தற்காலிக நியமன அடிப்படையில் நியமித்தமையால் உடன் அவர்களை சேவையில் இருந்து நிறுத்துங்கள் என்கின்றது அமைச்சு. ஆனால் பணியாளர்களோ 8 ஆண்டுகள் கடந்தமையால் எமக்கு நிரந்தர நியமனத்தை தாருங்கள் என்கின்றனர். இனி என்ன இழுபறிதான்....!

ஒரு செயலாளர்தான் இப்படி, ஏனைய அமைச்சுக்கள் தப்பி விட்டன என்றுதான் பொதுவாக எண்ணினர். ஆனால் அந்த எண்ணத்திலும் தற்போது இடி விழுந்து விட்டது. சுகாதார அமைச்சில் பணியாற்றிச் சென்றவரும் தன் பங்கிற்கு ஒரு 26 சிற்றூழியர்களை அள்ளிப் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார் அவர்களும் நிரந்தர நியமனத்தை தாருங்கள் என்று தற்போது கோருகின்றனர்.

சிற்றூழியர்கள், சுகாதார ஊழியர்கள், காவலாளிகள் விடயத்தில்தான் இந்த நிலை என்றால் கல்வி அமைச்சில் ஆசிரியர் நியமனத்திலும் குழப்பம்தான். அங்கும் 40 வரையானோரின் சான்றிதழ்களில் சொல்ல முடியாத அளவு குளறுபடிகள். அங்கே தற்போது இருக்கும் செயலாளர் வேறு வழியின்றி ஒரு கிடுக்குப் பிடியை பிடித்து விட்டார். அதாவது சர்ச்சைக்குரிய அனைவரையும் இடை நிறுத்தி விட்டார். ஆனால் நியமனம் வழங்கும்போது ஏன் இவை கண்டுகொள்ளப்படவில்லை என்ற கேள்விக்கு யாரிடமும் சரியான பதில் இல்லை.

அந்த 40 வரையானோருக்கும் இது வரை வழங்கிய சம்பளத்தை எவ்வாறு மீள அறவிடுவது என அதிகாரிகள் தலையைப் பிய்க்கின்றனர்.

வடக்கு மாகாணத்தில் அதிகாரிகள் மட்டத்தில் நடக்கும் திருக்கூத்தில் இன்று இங்கே பட்டியலிட்டவை சொற்பம்தான். முழுமையாக விரைவில் பட்டியலிட எதிர்பார்க்கின்றோம்.

\+ + +

இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா சில முக்கிய விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 காலப்பகுதியில் இருந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுமார் 8,000 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி, பொலிஸ் மற்றும் சுகாதாரத் துறைகளில் உள்ளவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளே அதிகமாக உள்ளன. மசாஜ் நிலையச் சோதனைகளின் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்தும் முறைப்பாடுகள் அடங்குகின்றன. இலங்கையின் சட்டங்களின்படி மசாஜ் நிலையங்கள் எனப்படும் ஸ்பாக்களில் பெண்களைக் கைது செய்ய முடியாது. அவ்வாறான இடங்களில் பணிபுரிபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அங்கீகரிக்கப்பட்ட திணைக்களங்களுக்கு மாத்திரமே உரிமை உண்டு. பாலியல் வர்த்தகம் கிரிமினல் குற்றம் அல்ல. அப்படிப்பட்ட விபச்சாரிகளை தண்டிக்க முடியாது. ஆயினும், விபச்சார விடுதிகளை நடத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம். – என்றார் அவர்.

அவர் சொல்லுகின்ற இந்த விடயங்கள் புதுமையாக உள்ளன. விடயமறிந்த சட்டத் துறை வட்டாரங்கள் கொஞ்சம் நிலைமையைத் தெளிவுபடுத்தினால் நல்லது.

\+ + +

நேற்று என் பத்தியில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியில் மாவை சேனாதிராஜாவை தொடர்ந்து நீடிக்க செய்வதற்காக அவரது வலது கையும் கட்சியின் இணைப்பொருளாளர்களில் ஒருவருமான கனகசபாபதியும் புதிதாக ராஜினாமா நாடகம் தொடங்கியிருக்கிறார் என ஒரு தகவல் வெளியிட்டிருந்தேன்.

மாவை சேனாதிராஜா, அவரின் மகன் வரிசையில் கனகசபாபதியும் புதிதாக ராஜினாமா நாடகத்தைத் தொடங்கி இருக்கின்றார் என்ற சாரப்பட அந்தத் தகவல் நேற்று இடம் பெற்றிருந்தது.

“இல்லை, இல்லை. அவர் ஏற்கனவே அத்தகைய நாடகத்தை நடத்தியவர்தான்” – என்று குறிப்பிட்டு நான் மறந்த விடயத்தை கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் எனக்கு நினைவு படுத்தி செய்தி அனுப்பி இருக்கிறார்.

“2013 இல் வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தமக்கு வேட்பாளர் இடம் தரவில்லை என்ற அதிருப்தியில் பொருளாளர் பதவியை ராஜினாமாச் செய்தவர் கனகசபாபதி. தேர்தல் முடிந்த பின்னர் மீண்டும் அந்தப் பதவியோடு ஒட்டிக் கொண்டவர். ஆகவே அவருக்கு இந்த ராஜினாமா நாடகம் அப்படி ஒன்றும் புதிதல்ல” – என்று செய்தி அனுப்பி இருக்கிறார் அந்த நண்பர்.

உண்மைதான். அது எனக்கு மறந்து விட்டது. பொறுத்த சமயத்தில் வாசகர்களுக்கு தெரிவிக்கும் விதத்தில் அவ்விடயத்தை நினைவூட்டிய நண்பருக்கு நன்றிகள்.

- - - - - - - - - - - - - - - - - - - -

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவுகூரும் வகையில், டிசம்பர் 26ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்படுகின்றன.

சுனாமி அனர்த்தத்தில் சேதமடைந்த 50 ஆம் இலக்க என்ஜினுடனான ரயில் ஒன்றும் வழமைபோல் பெரேலியவை சென்றடையவுள்ளதோடு ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் குழுவொன்றும் அந்த ரயிலில் பயணிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி சுமாத்ரா தீவுக்கு அருகில் 9.1 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சுனாமி பேரலை காரணமாக, இலங்கையின் 14 கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிப்பட்டதுடன் சுமார் 35 ஆயிரம் பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## சவேந்திர சில்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீடிப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக இருந்துவரும் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக் காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது.

எனினும், தற்போது வரையில் அவரது பதவிக் காலம் நீடிக்கப்படுமா அல்லது அப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்படுவாரா என்பது தொடர்பில் எவ்விதமான அறிவிப்புக்களும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போது,

“பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக் காலம் சம்பந்தமாக இதுவரையில் எவ்விதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை. அதுதொடர்பில் விரைவில் தீர்மானம் எடுப்போம்.” – என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பதவி வகித்திருந்த நிலையில் 2022ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி அவருடைய பதவிக் காலம் நிறைவுக்கு வந்திருந்தபோதும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 31ஆம் திகதி வரையில் பதவிக் காலத்தை நீடிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

- - - - - - - - - - - - - - - - - - - -

## இந்த அரசு கவிழும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பினார்கள். அந்த மக்களே எம்மை ஆட்சிக்குக் கொண்டு வந்துள்ளார்கள். மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்படுவது எமது பிரதான கடமை. அவர்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது எமது பிரதான குறிக்கோள்.

ஆளும் தரப்பின் கல்வித் தகைமை பற்றி கேள்வி எழுப்பும் எதிரணியினர் முதலில் தங்கள் கல்வித் தகைமையைப் பரிசோதிக்க வேண்டும்.

பொய்களைச் சொல்லி நாம் ஆட்சிக்கு வரவில்லை. நாம் நேர்மையுடன் நடந்தபடியால்தான் மக்கள் எம்மை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம். இனிமேல் இன, மத, மொழி ரீதியில் பிரச்சினைகள் வர இடமளியோம்.” – என்றார்.






# 8,747 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கடந்த 24 மணிநேரத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட வீதி விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 8,747 வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிவித்துள்ளது.


அதன்படி, இன் காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் காவல்துறை அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கடந்த 24 மணித்தியாலங்களில் வாகன விபத்துகள் எதுவும் பதிவாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, எதிர்வரும் காலங்களில் மிகவும் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தி, வீதி விபத்துக்களைத் தவிர்க்குமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சாரதிகளைக் கோரியுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய, விபத்துகளைத் தவிர்க்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும் விசேட வாகன சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் காவல்துறை அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்தத் தடை; வர்த்தமானி அறிவித்தல் வெளியிட அரசாங்கம் முடிவு




எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்தத் தடை விதிக்கும் வர்த்தமானி அறிவித்தல் இன்னும் சில நாள்களில் வெளியிடப்படும் என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வர்த்தமானி அறிவித்தல் குற்றவியல் சட்டம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் வெளியிடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தக விளம்பரங்களில் சிறுவர்களை அவசியமற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கங்கள் இது தொடர்பில் பல தடவைகள் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்ட போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனப் பல தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.




# அரிசி விலை தொடர்பில் அரசாங்கம் கலந்துரையாடலை முன்னெடுக்கவில்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் மேற் கொள்வது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு கலந்துரை யாடலையும் முன்னெடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் துள்ளார்.

நாட்டில் நிலவும் அரிசிக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திக் கும் வகையில், அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், அமைச்சரவை அங்கீகரித்த அளவுக்கு அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்துக்கு இயலாமல் போயுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் விநியோகஸ் தர்களிடமிருந்து எஞ்சிய அரிசி தொகை கிடைக்கப்பெறும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சார்பில் அரிசி இறக்குமதி செய்வதற்காக பொறுப்பளிக்கப்பட்ட அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் சதொச நிறுவனத்தின் செயற்பாடுகளால் இவ்வாறு அரிசி இறக்குமதியில் தாமதம் ஏற்படவில்லை எனத் தெரித்தார்.

விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கிய சிக்கல் காரணமா கவே, அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்த்த அளவு அரிசியை, இலக்கு வைக்கப்பட்ட காலத்தினுள் இறக்குமதி செய்ய முடியாமல் போனதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு சந்தையில் அரிசியை பெறமுடி யாததுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரியை நீக்குவதற்கு அல்லது கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் கோருகின்றனர்.

அத்துடன், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி 220 ரூபாவுக்கே தங்களுக்கு வழங்கப்படுவதாகவும் அதனை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்வது சிரமம் எனவும் வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில், கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் மேற் கொள்வது தொடர்பான அரசாங்கம் எந்தவொரு கலந்துரை யாடலையும் முன்னெடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் துள்ளார்.

# வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரி தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை: நலிந்த ஜயதிஸ்ஸ



வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரி தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள் ளார்.

அத்துடன் இது தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் அவை இறக்குமதி செய்யப்படும் திகதிகள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆறா வடுவும் மறந்த வடுவும்

கடலையே நம்பி வாழ்ந்த மக்களைக் கடலே கொன்றொழித்த சுனாமிப் பேரலை தாக்கி இன்றுடன் இருபது ஆண்டுகள் பூர்த்தியாகுகின்றன.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுக்கு அருகில் ஆழ் சமுத்திரத்தில் பெரும் குமுறலாக வெடித்த பூகம்பம் கிளப்பி விட்ட ஆழிப் பேரலை இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, இலங்கை, இந்தியா உட்பட்ட பல நாடுகளைத் தாக்கி மிக நீண்ட கடற்கரையோர நிலங்களை சின்னாபின்னமாக்கி, சில மணிநேரத்திலேயே அடங்கிப் போனது.

இந்த ஆழிப் பேரலை சுனாமியின் சீற்றத்தால் 14 நாடுகளில் 2 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் செத்து மடிந்தனர். இதில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள்.

இலங்கையில் ஆழிப்பேரலைகளால் 35 ஆயிரத்து 322 பேர் இறந்தனர் என அறிவிக்கப்பட்டது. உண்மையில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைத் தாண்டும் என்பது பலரின் ஊகமாக இருந்தது. ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தற்காலிகமாக இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. ஒன்றரை இலட்சம் பேர் தமது வாழ்வாதாரத்தை இழந்தார்கள். அவர்களுள் 75 வீதமானவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டவர்கள். அத்துடன் ஆயிரக்கணக்கான வீடுகள், வியாபார நிலையங்கள் என்பன முற்றாக அழிந்து போயின. சில நூற்றுக்கணக்கான உல்லாச விடுதிகள், உணவகங்கள் என்பன சேதமாகின. ஆயிரக்கணக்கான வாகனங்கள் உட்பட பெரும் சொத்தி ழப்பும் ஏற்பட்டது.

இதனைத் தவிர, கடல் நீர் புகுந்ததால் 259 சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள விவசாய நிலங்கள் உவராகி பயிர் வளர்ப்புக்குத் தகுதியற்றவையாக மாறின. விவசாய இயந்திரங்கள் நாசமாகின. மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள், படகுகள் என்பனவும் சேதமாகின. அத்துடன் பல இடங்களில் வீதிகள், பாலங்கள் முற்றாகச் சேதமாகி பிரதேசங்கள் துண்டாடப்பட்டன. இதனால் இலங்கையின் கரையோரப் பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு தமது வாழ்விடங்களை இழந்து உதவிக்கு கையேந்தும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

சுனாமிப் பேரலைகள் ஏற்படுத்திய பேரழிவுகள் மக்கள் மனதில் ஆறாத வடுவாகப் பதிந்து விட்டன. ஆனால், அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற அரசியல் நடவடிக்கைகள் ஏற்படுத்திய வடுவை தமிழ் மக்கள் மறந்து போனமைதான் தமிழர் வாழ்வியலில் மிகப் பெரிய துன்பியல் போக்காகும்.

சுனாமி அலை தாக்கியபோது இலங்கையில் அரசுக்கும், தமிழர் தாயகத்தின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்தை ஒட்டிய சமரச நிலை நீடித்தது. சுனாமி தாக்கியமையை அடுத்து தமிழர் தாயக பிரதேச நிவாரண மற்றும் மீள் கட்டமைப்பு பணிகளை முன்னெடுப்பதற்காக அப்போதைய சந்திரிகா அரசு விடுதலைப் புலிகளோடு சுனாமிக்கு பின்னரான நடவடிக்கை நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை - Post -Tsunami Operational Management Structure (P-TOMS) - இணங்கி உருவாக்கியது.

பேரினவாத மேலாதிக்கத் திமிரோடு அதைக் கடுமையாக எதிர்த்தது ஜே.வி.பி. அந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்குப் போய், அந்தக் கட்டமைப்பின் செயற்பாட்டுக்கு எதிராக நீதிமன்றத் தடையைப் பெற்று, அந்த இணக்கத்தையே சீர்குலைத்தது ஜே.வி.பிதான்.

இப்போது அந்த ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து, தங்கள் இனத்தின் அரசியல் ஆன்மாவில் ஏற்பட்ட வடுவை மறந்து செயற்பட்டிருக்கின்றார்கள் தமிழர்களில் கணிசமானோர்.



# இன்று காரைதீவில் துவி தசாப்த சுனாமி தின ஆத்ம சாந்தி பிரார்த்தனை!

**(வி.ரி.சகாதேவராஜா)**

இந்துசமுத்திரத்தை உலுக்கிய ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்று வியாழக்கிழமை இரு தசாப் காலமாகிறது.


அதனையொட்டி நாடெங்கிலும் துவி தசாப்த சுனாமி தின வைபவங்கள் நடாத்த பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைதீவில் 2004 சுனாமியில் உயிர்நீத்த 867 பேரை நினைவுகூர்ந்து வருடாவருடம் காரைதீவு கடற்கரையில் றிமைன்டர் விளையாட்டு கழகத்தினரால் நிறுவப்பட்ட நினைவுத்தூபி முன்றலில் பொதுவான வைபவம் நடைபெறுவது வழக்கம்.

அந்த நிகழ்வு இம்முறையும் இன்று வியாழக்கிழமை காலை இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்கு ஆத்மார்த்த சுனாமி ஒளிதீபம் ஏற்றுவதோடு அஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இடம்பெறும் என்று சங்க செயலாளர் கு.ஜெயராஜி தெரிவித்தார்.












# கறை படிந்த கரிநாள்!



## 2004 - 2024
## டிசெம்பர் 26
## சுனாமி பேரலை!!



நடராஜன்
ஹரன்

இலங்கை வாழ் மக்கள் சுனாமி என்ற கடல் அரக்கனின் அழிவுகளை 2004 இல் கண்டு அனுபவித்து விட்டோம். எதிர்காலத்தில் இன்றைய காலநிலை மாற்றத்தால் ஏற்படப் போகும் இயற்கை அழிவுகளில் இருந்து மக்களின் உயிர்களை காப்பாற்றும் நடவடிக்கைகளை அரசுகள் முன்னெடுக்க வேண்டும். இதற்கு சர்வதேசத்தின் உதவிகளையும் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

உலகமே நத்தார் பண்டிகையில் களைகட்டி கொண்டாட்டங்கள் மலர்ந்து விட்ட நேரம் மக்கள் நள்ளிரவு ஆராதனையை முடித்து விட்டு வீடுவந்து அளவளாவில் இன்புற்றுக் காலை சிற்றுண்டிகளை பெற்றவாறு புதிய எதிர்பார்புடன் உண்டு மகிழ்ந்து கொண்டாடியிருந்தனர். உறவினர்கள் இல்லங்களை நாடி வருவதும் போவதுமென மகிழ்ச்சி வெள்ளம் தாண்டவமாடியது.

இந்துக்கள் கூட திருவெண்பாவை பூஜையை ஆலயங்களில் முடித்து விட்டு வீடுகளுக்கு வந்து கொண்டிருந்தனர். ஆண்கள் மற்றும் உழைக்கும் பெண்கள் தமது அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி அதாவது கிறுஸ்மஸ் தினத்துக்கு மறுநாள் காலை 8 மணிவரை மக்கள் தமது இயல்பு வாழ்வுகளில் ஈடுபட்டிருந்தனர். கால நிலை கூட சீராக இருந்தது. 08 மணிக்குப் பின்னரான காலகட்டமே மக்களின் வாழ்வுதனை தலை கீழாகப் புரட்டிப் போட்டது என்பது இன்றைய இளைஞர்களுக்கு சரித்திர நிகழ்வாக அமைந்துவிட்டது.

இந்த சமுத்திரம் என்றுமில்லாதவாறு கொந்தளித்தது. சுமார் 40 முதல் 50 மீற்றர் உயரத்துக்கு கடல் அலைகள் சுழன்று பொங்கி எழுத்தது. கொடிய அரக்கனின் தோற்றத்தில் உருவெடுத்த கடற்கோள் தாமதியாது கரையேர பிரதேசங்களுக்குள் உட்புகுந்து நொடிப் பொழுதில் மக்களையும் ஏனைய உயிர் உடமைகளையும் ஈவு இரக்கமின்றி காவு கொண்டு விட்டது. இந்த கடல் பேரலையில் உயிர் தப்பிய எமது உடன் பிறாவா உறவுகள் மத்தியில் ஆறாத ரணத்தை இது ஏற்படுத்திச் சென்று விட்டது.

கிறுஸ்மஸ் கொண்டாட்டங்களை எதிர் நோக்கி ஆட்டம் பாட்டம் போட விருந்த மக்களின் வீடுகளில் மரண ஓலம் பல கடற்கரை பகுதிகளில் அமைந்திருந்த வீடுகளையே காணவில்லை. வீடு வாசலுடன் தோட்டம் துரவுகளையும் நீண்டு வளர்திருந்த மரங்களையும் காணமுடியாத நிலையில் மக்களை எங்கு சென்று தேடுவது.

தெற்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் 85 ஆயிரம் அப்பாவி மக்கள் சில நொடிப் பொழுதில் கடல் விழுங்கிவிட்டது. கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் உள்ள நிலையான கட்டடங்கள் யாவும் கடல் அலையால் தூக்கி எறியப்பட்டுச் சின்னா பின்னமாக்கப்பட்டது.

இவ்வாறு அழிவுகளை ஏற்படுத்திய சுனாமி கடற்கோள் எவ்வாறு தோற்றம் கண்டது என நோக்குகையில் எமது இலங்கை தீவிலிருந்து சுமார் இரண்டாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுமாத்திரா தீவின் கடலுக்கு அடியில் உருவான பூகம்பத்தால் சுனாமி பேரலை தோன்றியுள்ளது. அது பொங்கி எழுந்து சீறிப் பாய்ந்ததால் இந்தோனேசியா, தாய்லாந்து, அந்தமான், நிக்கோபர் தீவுகள் இலங்கை, இந்தியா, மாலைதீவு, வட ஆபிரிக்கா நாடுகள் சிலவற்றின் கரையோரப் பகுதிகளைத் தாக்கி அளித்துள்ளது.

இலங்கை உட்பட படுமோசமாக தாக்கப்பட்ட நாடுகளில் உயிரற்ற வெற்றுடல்கள் நல்லடக்கம் செய்யப் படாமல் குவியல் குவியல்களால் பாக்கும் இடமெல்லாம் காணப் பட்டதை நேரடியாகக் கண்டு உணர்ந்தவர்கள் கரையோர வாழ் மக்களே. இந்த மனித உடல்கள் உள்ளூர் மக்களால் சேகரிக்கப் பட்டு ஒரே புதைகுழியில் போட்டு அடக்கம் செய்யப்பட்டனர். ஆங்காங்கே குவியல் குவியலாக இரண்டு மூன்று தினங்களுக்கு மேல் கிடந்த மனித உடல்கள் புல்டோசர்களால் சேகரிக்கப்பட்டு பாரிய கிடங்குள் வெட்டப்பட்டு புதைக் கப்பட்டமை வரலாற்று நிகழ்வு.

சுமாத்திராவின் வடமுனை மாநிலமான அச்சே முற்று முழுதுமாக அழிவுக்குள்ளாகியது. தீவுக் கூட்டங்களில் ஒன்றிணைந்த இந்தோனேசியாவில் 2004 பூகம்பத்தால் சில தீவுகள் சுமார் 20 மீற்றர் கடலுக்குள் நகர்ந்துவிட்டதாகவும் இதனால் உலக வரை படத்தில் கூட சிறிய மாற்றங்கள் ஏற்படவேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றும் பூகற்பவியலாளர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் கடற்பேரலையால் அம்பாறை மாவட்டத்திலேயே கூடுதலான உயிர் அழிவுகள் ஏற்பட்டன. அதற்கு அடுத்த படியாகக் காலி அம்பாந்தோட்டை மாவட்டமே காணப்பட்டது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கணிசமான தொகை

தொடர்ச்சி ▼

# கறை படிந்த கரிநாள்!



தொடர்ச்சி ▲

யில் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் மாண்டு போனார்கள். சுனாமி பேரலை யால் ஏற்பட்ட இழப்பு நெஞ்சை உறைய வைக்கும் கொடுமையிலும் கொடுமை எனலாம்.

சுனாமி அலையானது ஒரு விநாடிக்கு இருநூறு தடவைகள் சுழல்வதால் கடலுக்குள் இருந்து மண்ணையும், சுரிகளையும் சுருட்டி எடுத்துக் கொண்டு கரையைக் கடந்து ஊருக்குள் பிரவேசித்து விடுகின்றது.

எமது இலங்கையில் சுனாமி பேரலையானது சுமார் இருநூறு மீற்றருக்குத் தமது முழுமையான ஆதிக்கத்தை செலுத்தி உள்ளது.

26.12.2004 காலை 06.30 இற்கு ஏற்பட்ட பூகம்பம் 123 ஆண்டுகள் கழிந்து இந்து சமுத்திரத்தில் ஏற்பட்டுள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த 2004 டிசெம்பர் 26 கடற் கொந்தழிப்பால் அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசங்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன இதில் பெரியநீலாவணை யிலிருந்து பொத்துவீல் அறுகம்பை வரையான நீண்ட அம்பாறை மாவட்டத்தின் கடற்கரை பிரதேசங்களில் நிகழ்ந்த பெரும் தொகையான மரணங்களில் சுமார் 85 வீதமான மரணங்கள் கல்முனை பிரதேசத்திலுள்ள மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக் குடி, சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய ஆறு கிராமங்களிலேயே நிகழ்ந்துள்ளன.

எஞ்சிய மரணங்கள் நிந்தவூர், அட்டாளைச்சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு சின்னமுகத்துவாரம், திருக்கோவில், தம்பட்டை, தம்பிலுவில், கோமாரி, பொத்துவீல், வினாயகபுரம், உமிரி அறுகம்பை, உல்லை ஆகிய பிரதேசங்களில் நிகழ்ந்துள்ளன. இதில் 10500 இற்கும் மேற்பட்டோர் மாண்டு போயினர். சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டனர் என்று கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தூர இடைவெளியில் அமைந்திருந்த குடியிருப்பு மனைகள் அழிவடைந்தும் பகுதியளவில் சேதமடைந்தும் இருந்தன என்றும் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ.நுஃப்மாந் தனது சுனாமி கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நேரத்தில் கடற்கரையைக் கடந்து கடலலை ஊருக்குள் வருகின்றது. ஓடுங்கள்... ஓடுங்கள்... என்ற கூக்குரல் நாற்திசைகளும் கேட்கின்றது. இதை மக்கள் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. இளைஞர்களும் சமூக ஆர்வலர்களும் படப்பிடிப்பாளர்களும் புகைப்பட ஊடகவியலாளர்களும் வீடுகளில் இருந்து அவசர அவசரமாக கடற்கரைப் பக்கமாக விரைவாக ஓடி வேடிக்கை பார்க்கின்றார்கள். முதலாவது அலை கரையைக் கடந்து ஊருக்குள் புகுந்தது. இது அவ்வளவு பாரிய சேதங்களை ஏற்படுத்தவில்லை. சுமார் 15 நிமிட இடைவெளியில் பாரிய அலை வானைத் தொடும்மளவு விரைந்து கரையை நோக்கி வந்தது. வேடிக்கை பார்த்தவர்களைக் கடலலை அள்ளிச் சென்றது.

வீடுகள் நீரில் அள்ளுண்டு தோனியாக மாறி மிதந்து திக்கு திசையின்றிச் சென்று காணாமல் போய்விட்டன. தாயின் மடியில் கைகளில் இருந்த பச்சிளம் குழந்தையைக் கண்ணெதிரே கடலலை பறித்து சென்றது.

எங்கும் மரண ஓலம். மக்கள் இருந்த வீடு வாசல்களை காணவில்லை குடும்பங்கள் திசை கெட்டு பல்வேறு பக்கமும் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். கடலலையின் கோரப்பிடிக்குள் சிக்கி இறந்தவர்கள் போக ஏனையவர்கள் 2014.12.26 மதியத்துக்குப் பின்னர் மேட்டுப்பாங்கான உயந்த இடங்களில் ஒன்று கூடிச் செய்வதறியாது தடுமாறிய வண்ணம், யார் யாரை தேடுவது என்பது தெரியாது பிரமை பிடித்த நிலையிலேயே நின்றனர். இதன் வலி வேதனைகள் அன்று நேரிடையாக அனுபவித்தவர்களுக்குப் புரியும்.

அன்றைய சுனாமிப் பேரலையால் கடல் அலையில் அள்ளுண்டும் திக்குத் திசை தெரியாது மூச்சடைத்து மாண்டவர்களே அதிகம். ஆனால் நடுக்கடலில் நின்ற பெரிய ஆழ் கடல் மீன்பிடி படகுகள் மற்றும் அதில் பயணம் செய்தவர்களும் பத்திரமாகக் கரை திருப்பியிருந்தனர். அந்தத் தருணத்தில் தாம் ஆழ் கடலில் மணல் திட்டுக்களை கண்டதாகவும் தமது வள்ளம் மண்ணில் தரை தட்டி சில மணினேரங்களில் மீண்டும் நீர் மட்டம் சடுதியாக உயர்ந்ததாதவும் தெரிவித்தனர்.

மனித இனம் பேரவலம் ஒன்று நிகழ்தபோது சகல விதமான விருப்பு வெறுப்புகளையும் மறந்த மனித நிலைக்கு வந்து விடும். இதுவே நியதியும் யதார்த்தமுமாகும். சுனாமி ஏற்பட்ட போது எமது நாட்டில் கொடிய யுத்தம் நிலவிய காலகட்டம் தமிழ் மக்கள் பாதுகாப்பு படையினரைக் கண்டு ஓடி ஒழிந்த காலப் பகுதியாகும்.

இதேபோல் படையினர் தமிழ் பேசும் மக்கள் எவரையும் அன்றைய காலகட்டத்தில் நம்பத் தயார் இல்லை. இரு தரப்பும் இரு துருவம். ஆனால் சுனாமி அலை தாக்கி அழித்த அன்று அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கடற்கரைக்கு மிக அண்மித்ததாகவிருந்த விசேட அதிரடிப்படை முகாம் கடல் அலையால் மிக மோசமாக தாக்கப்பட்டது. டையினரையும் நிலைகுலைய வைத்தது. படையினர் உடுத்த உடையுடன் கடல் நீர் தலையில் இருந்து சொட்ட சொட்ட தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு படைத்தளபாடங்களுடன் வந்து சேர்ந்து கண்ணகிபுரம் பாடசாலையில் தஞ்சமடைந்தனர். படையினரின் பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு தமிழ் இளைஞர்கள் அன்று பேருதவி செய்துள்ளனர்.

இதே போன்று அன்றிரவு வீதியோரங்களிலும் ஆலயங்களிலும் உயரமான மலைகளிலும் உணவு நீரின்றி அல்லல் பட்ட தமிழ் மக்க

தொடர்ச்சி ▼

# கறை படிந்த கரிநாள்!

தொடர்ச்சி ▲

ளுக்கு உடனடியாக சமைத்த உணவுகள் வழங்கப்பட்டது. தேவையான முதலுதவிகளும் படையினரால் வழங்கப்பட்டது. இதுபோல அனைத்து பகுதிகளிலும் இன மத மொழி வேறுபாடு இன்றி மனிதர்களெனும் மனிதப் பண்புடன் ஒருவருக்கு மற்றையவர் உதவிக் கரம் புரிந்ததை மறக்க முடியாத வரலாற்று உண்மை இதுவே மனித இனத்தின் அடையாளம்.

சுனாமி தாக்கி அழித்த பின் ஒவ்வொருவரும் தமது உடன் பிறப்புக்ளையும் உற்றார் உறவினர்களையும் தேடும் பணிகளிலேயே தமது அன்றைய பொழுதைக் கழித்தனர். இதற்கு உதாரணமாக அலைபேசிகள் சில மணி நேரங்கள் தொடர்பு எட்ட முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டிருத்ததும் அந்தந்த தொலைபேசி நிறுவனங்களுக்கு ஒரு புதிய அனுபவத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கும்.

இத் தேடுதலானது ஒரு மாதம் வரை நீடித்ததும் வருடங்கள் கடந்தும் உள்ளது. கடலலை கொண்டு சென்றவர்கள் போக ஏனையோர் குடும்பங்களுடன் இனைந்து கொண்டனர். கடல் தாயின் மடியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவர்கள் இன்றுவரை கடலுக்கு அடியிலும் மண்ணில் புதையுண்டும் எம்மை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த கடற்சீற்றத்தால் கடலை நம்பி ஜீவனோபாயம் நடத்திய மீனவர்கள் அந்த சமுதாயம் பாரிய உடமை, உயிர் இழப்புகளை சந்தித்துள்ளது.

இதே நேரம் நத்தார் விடுமுறையுடன் தமது உறவுகளை காண பல்வேறு பரிசுப் பொதிகளுடன் பல கனவுகளுடன் கொழும்பில் இருந்து, ஹம்பாந்தோட்டை வரை சென்ற தென் கரையோர ரயில் என்றுமில்லாதவாறு அதிக சன நெரிசல் நிறைந்ததாக பயணித்துக்கொண்டிருந்த போது ரயில் பெரலிய என்ற இடத்தை அண்மித்த போது கடலலை ஒன்று ரயிலில் மோதியதில் பெட்டிகள் சின்னா பின்னமாகி கடலலையில் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டன.



மக்கள் கடலுடன் சங்கமமானார்கள். இந்த ரயில் விபத்தில் அதிரஷ்ட வசமாக ஒரு சில பேர் தப்பித்துள்ளனர் என கூறப்படுகின்றது. இதன் இறப்பு எண்ணிக்கை குறைந்தது 1700 பேர. அனேகமாக 2000 இற்றும் மேற்பட்டோரில் 600 உடல்களையே மீட்புக் குழுவினர் மீட்டு இருந்தனர். இவ் ரயில் விபத்தே ஆசியாவில் நடந்த பாரிய பேரழிவாக கொள்ளப்படுகின்றது.

வடக்கு கிழக்கைத் தாக்கிய அந்த சுனாமி அலை தென் பகுதி நகரான காலி கோட்டை வரை தனது ஆதிக்கத்தை செலுத்தி உள்ளது. காலி கோட்டை சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள சகல வர்த்தக நிலையங்களும் அழிவுக்குள்ளாகின.

எனினும் கடந்த மாதத்தில் இடம்பெற்ற வெள்ளம் மண் சரிவுகளை இன்னும் நாம் சரியாக வரும் முன்னர் கணிக்க முடியாதவர்களாவே இருக்கின்றோம் என்பது கவலைதரும் விடயமே.

இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக மனிதப் பேரவலம் ஏற்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் ஓர் ஸ்திரத்தன்மையில் பேண முடியும் என்பது திண்ணம். ■

# 50,000 ஐ கடந்த சுற்றுலாப் பயணிகள்

இந்த மாதத்தின் ஆரம்பம் முதல் இதுவரை நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 150,000 ஐ கடந்துள்ளது.

அந்த காலப்பகுதியினுள் இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவிலிருந்து மாத்திரம் 35,131 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 19 லட்சத்து 66 ஆயிரத்து 256 பேர் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# 20 ஆவது ஆண்டில் ஆழிப்பேரலை நினைவு!

## சுனாமி நிவாரண பொறிமுறையை எதிர்த்த ஜே.வி.பி.!



**(ஆழிப் பேரலையாக தமிழர் தாயகத்தை இயற்கை அழித்து இருபதாம் ஆண்டு நினைவுகளில் ஈழத்தமிழர் மூழ்கியுள்ளனர்.)**

**- நவீனன் -**

இயேசு பாலன் பிறப்பை தேவாலயங்கள் எங்கும் மங்களம் பொங்கும் நிகழ்வுகள், பூஜைகள் நடந்து கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருந்த நேரம்.

அந்த நேரம்தான் இந்தனோசியா கடலடியில் ஏற்பட்ட பூமித் தட்டுக்களின் உரசல் பூமிப்பந்தையே உலுக்கி இந்து மகா சமுத்திர நீரையே விழுங்கிக் கொள்கிறது.

2004.12.26 அன்று அதிகாலை. ஈழத்து நேரம் அதிகாலை 6.28 மணியளவில் விழுங்கிய நீரை பூமித்தகடுகள் துப்பிவிட மேலெழுந்த நீர் பெரும் அலைகளாகி சுனாமி என்ற சொல்லை ஈழ தேசத்துக்கு அறிமுகப்படுத்துகிறது.

2004 மார்கழி மாத இரவு தனது இருட்டைத் தொலைத்து சூரிய ஒளியால் ஒளிரத் தொடங்கிய அதிகாலை நேரம். பல ஆயிரம் ஆசைகள் நெஞ்சில் நிறைந்து கிடக்கிறது. எம் வாழ்வுக்கு ஒளி காட்ட பாலன் பிறந்துவிட்டான் என்று எம் ஊர்கள் மட்டுமல்ல உலகமே மகிழ்வில் திளைத்துக் கொண்டிருந்த வேளையில் ஈழ தேசத்தை போலவே, பல ஆண்டுகளாக ஆச்சே தேசம் விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவிற்கு எதிராக போராடி ,பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவினை இதே காலகட்டத்தில் எதிர் கொள்கிறது.



ஈழத்தில் கரையோர மக்கள் காலை 09 - 9.15 ஈழத்து நேரப்படி நத்தார் கொண்டாட்டத்தில் இருந்த மக்கள் கடற்கரை நீர் உள் இழுக்கப்படுவதை கண்டு என்ன என்று அறிய முன் கடலில் பாரிய அலை ஒன்று கரை நோக்கி வருவதை கண்டு திகைத்து நின்றார்கள்.

### தமிழர் தேச கட்டுமான சிதைவு

நீண்ட காலமாக விடுதலைக்காக போராடிய தமிழ் மக்கள் "தேசம்" எனும் கட்டுமானத்துக்குள் வந்த காலகட்டமே 2003-2005 ஆகும். விடுதலையை மூச்சாக கொண்டு போராடிய தமிழர் தேசம் பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவை இக்காலகட்டத்தில் எதிர் கொள்கிறது.

ஈழத்தின் கீழ்நில கடற்கரைப் பகுதிகள் யாவும் சுனாமி அலைகளால் தாக்கப்பட்டுப் பாரிய சேதம் ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 30000 மக்கள் இயற்கையின் சீற்றத்தால் உயிரிழந்து, பல ஆயிரம் மக்கள் காயமடைந்து, பல கோடி உடமை-களை இழந்து போன அந்த நொடி இன்றும் இரத்த வாடையோடு நகர்கிறது.

தமிழ் இனத்தை மட்டுமல்லாது பல்லின மக்களையும் ஏதுமற்ற ஏதிலிகளாக்கிய சுனாமி சிறிய இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தாக்கி விட்டு சென்ற போது

தொடர்ச்சி ▼

# 20 ஆவது ஆண்டில் ஆழிப்பேரலை நினைவு!

தொடர்ச்சி ▲

மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றார்கள். கடல் அலையால் தூக்கி எறியப்பட்டவர்கள் கையில் கிடைத்தவற்றை பிடித்து கொண்டு தம்மை காத்து கொண்டார்கள். பனை, தென்னை என்றும் மரங்களின் கொப்புகளிலும் பிடித்துக் கொண்டு காத்து கொண்டவர்கள் பயங்கர காயங்களாலும் பாதிக்கப் பட்டார்கள்.

**அழிந்த தேசத்தை மீள அழித்தனர்**

இருபதாவது ஆண்டில் சுனாமியின் அழிவுகள் தமிழ் மண்ணில் நிகழ்ந்ததன் பின்னர் அதற்குரிய நிவாரண பொறிமுறையை தடுத்து நிறுத்திய பெருமைக்கு உரியவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தற்போது அனைத்து மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான, இன, மத, மொழி வர்க்க வேறுபாடற்ற, நாட்டுக்குத் தேவையான அரசியல் யாப்பை எங்களால் உருவாக்க, வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்து இன மக்களும் எமக்கு ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் என தேர்தல் வென்றதன் பின்னர் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சம அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்த இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வை, வழங்குவார்கள் என நம்பிக்கையை இந்த தேர்தல் தீர்மானிக்கிறது என்றும் சில ஊடகங்கள் ஊகங்களை வெளியிட்டன.

இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ, அதன் ஊடாக அரசியல் செய்வதற்கோ இனிமேல், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப் போவதில்லை. சட்டத்துக்கு மேல் யாருமில்லை என கன்னி உரையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

**சுனாமி நிவாரண பொறிமுறையை எதிர்த்த ஜே.வி.பி.**

இப்போது இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ இடமில்லை என்று கூறும் ஜே.வி.பியின் முன்னைய வரலாற்றை பலரும் மறைக்க முயல்கின்றனர்.

1994 நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசை ஜே.வி.பி. ஆதரித்து வந்தாலும், பின்னர் குமாரதுங்க நிர்வாகத்தை கடுமையாக விமர்சித்திருந்தது.

2000 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் சென்ற இன்றைய ஜனாதிபதி 2001 தேர்தலில் மீண்டும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

2004 இல், ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் மக்கள் விடுதலை முன்னணி போட்டியிட்டு 39 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கைப்பற்றியது. குருணாகல் மாவட்டத்தில் இருந்து அநுர திசநாயக்கா நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

சந்திரிக்காவின் அமைச்சரவையில் விவசாயம், கால்நடைகள், நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக 2004 பெப்ரவரியில் நியமிக்கப்பட்ட அநுர, 2005 ஜூன் 16 இல் தன் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

காரணம் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசு புலிகளுடன் இணைந்து ஏற்படுத்திய வட, கிழக்கு மாகாணங்களின் சுனாமி நிவாரண ஒருங்கிணைப்புப் பொறிமுறையை ஜே.வி.பி. எதிர்த்தமையே என்பது வரலாற்று உண்மையாகும். இப்படித்தான் உள்ளது உண்மையான வரலாறு.

ஆயினும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போதும், பொதுத்தேர்தலின்போதும், பல வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தார்கள்.

**13ஆவது திருத்த சட்ட நீக்கம்?**

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சம அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்த இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வை

தொடர்ச்சி ▼



# 20 ஆவது ஆண்டில் ஆழிப்பேரலை நினைவு!

தொடர்ச்சி ▲

வழங்குவோம் என ஜனாதிபதி தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின் போதும், வாக்குறுதிகளை ஜே.வி.பி. வழங்கியிருந்தது.

1980களின் பிற்பகுதியில் ஜே.வி.பி. ஆரம்பத்தில் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த இருந்தது. ஆனாலும் பின்னய காலத்தில் கட்சியின் தலைவர் றோகண விஜயவீர இனவாதத்தை கையில் எடுத்தார்.

அதன் பின்னர் இனவாதத்தை தூண்டிவிட்டே இக்கட்சி செயற்பட்டது. தற்போதைய தேர்தல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு இலங்கை மக்கள் கொடுத்த அறுதிப் பெரும்பான்மையை 168 ஆசனங்களில் 140 இல் வெற்றி பெற்றுச் சாதனை படைத்தார். ஆனால் 1983 இனக் கலவரத்துக்கு வித்திட்டதோடு, இலங்கையை இரத்தக் களரியாக்கிய சிங்கள பேரினவாத அரசின் கொடூரமான ஆட்சியை உலக அரங்கில் வெளிப்படுத்தினார்.

2019 பின்னர் 69 லட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகவும், 145 ஆசனங்களுடன் 2 :3 நாடாளுமன்ற பெரும்பான்மையை பெற்ற அரசாகவும் உருவெடுத்த பொது

அனைத்து மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான, இன, மத, மொழி வர்க்க வேறுபாடற்ற, நாட்டுக்குத் தேவையான அரசியல் யாப்பை எங்களால் உருவாக்க , வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்து இன மக்களும் எமக்கு ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் என தேர்தல் வென்றதன் பின்னர் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சம அந்தஸ்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்த இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வை, வழங்குவார்கள் என நம்பிக்



வாக்குறுதிகளை மீறி, தமிழ் மக்களுக்கு ஓரளவு அதிகாரப் பகிர்வு வழங்கிய 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கப் போகிறார்கள் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரிஸ்வின் சில்வா கூறியதை பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டாலும், அவர்கள் மீண்டும் தங்கள் இனவாத அரசியலை விட்டு வெளியேறவில்லை என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

### கற்றுணராத 77 வருட அனுபவங்கள்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த 77 வருட அனுபங்களை கற்றுணர்ந்த பாடங்கள் பலவும், காற்றில் கரைந்ததே மிச்சமாகும்.

1977ஆம் ஆண்டு தேர்தலில் ஜன பெரமுனவும், கோட்டபய ராஜபக்ஷவும் நாட்டை வங்குரோத்தக்கு இட்டுச்சென்று, உலகின் எல்லா நாடுகளிலும் கையேந்தி பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

கடந்த 77 வருட அனுபங்களை கற்றுணர்ந்த எந்த அரசும் இதுவரை நாட்டை இனவெறி தவிர்த்து ஆளவில்லை.

தற்போது 2024 இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அறுதிப்பெரும்பான்மை பெற்ற அதாவது 159 ஆசனங்களைப் பெற்ற தனிப்பெரும் கட்சியாக தேசிய மக்கள் சக்தியும் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து உள்ளது.

கையை இந்தத் தேர்தல் தீர்மானிக்கிறது என்றும் சில ஊடகங்கள் ஊகங்களை வெளியிட்டன.

ஆழிப் பேரலையாக தமிழர் தாயகத்தை இயற்கை அழித்த சுனாமி 2004 ஆண்டின் இருபதாம் ஆண்டு நினைவுகளில் ஈழத்தமிழர் மூழ்கியுள்ளனர். ஆனால் சுனாமி நிவாரண பொறிமுறையை எதிர்த்த ஜே.வி.பியின் இன வஞ்சகத்தை தமிழர் தேசம் ஒருபோதும் மறக்காது.

தற்போது இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ இடமில்லை என்று கூறும் ஜேவிபியின் முன்னைய வரலாற்றை பலரும் மறைக்க முயல்கின்றனர். ■



# அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி மீது துஷ்பிரயோகம்

சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாணவியொருவர் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முறைப்பாட்டில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் காதலர் களான மாணவனும் மாணவியும் பேசிக் கொண்டு இருந்துள்ளனர் எனவும் இதன்போது அங்குவந்த அடையாளம் தெரியாத இருவர் மாணவரை தாக்கி விட்டு அவர் கண்முன்னே மாணவியை துஸ்பிரயோகம் செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட காத லர்கள் இது குறித்து பொலிஸ் நிலை யத்தில் புகார் அளித்துள்ள நிலையில், இந்த சம்பம்பவம் பூதாகரமாக வெடித் துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும், பல்கலைக்கழக வளா கத்தில் வைத்தே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதால் மாணவர்களின் பாது காப்பு குறித்து பெற்றோர்கள் மத்தியில் அச்ச நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர் பில் கோட்டூர்புரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

# பெண்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்

## விஜய் வலியுறுத்தல்






"அண்ணா பல்கலைக்கழக வளா கத்திற்குள் மாணவி துஸ்பிரயோகத் துக்கு உள்ளாகி இருக்கும் செய்தி, மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. குற்றவாளி மீது விரைவான சட்ட நடவ டிக்கை மேற்கொண்டு உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும்."

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில்,

"சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்திற்கு உள்ளேயே, மாணவி ஒருவர் பாலியல் வன்கொடு மைக்கு உள்ளாகி இருக்கும் செய்தி, மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையை யும் அளிக்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் நிர்பயா நிதியைப் பயன்படுத்தி, பெண் களுக்குப் பாதுகாப்பு இல்லாத இடங் களைக் கண்டறிந்து, அங்கு ஸ்மார்ட் கம்பங்கள் அமைத்தல், அவசர கால பட்டன்கள், சி.சி.டி.வி. கேமரா, தொலை பேசி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்து தல், மாநகர பஸ்கள் அனைத்திலும் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்தல், பொது இடங்களில் பெண்களுக்கான கழிப்பறை வசதிகள், பெண்கள் பாது காப்புக்கான அவசர காலத் தொலை பேசி மற்றும் கைப்பேசிச் செயலி வசதி உள்ளிட்டவற்றை ஏற்படுத்தி, கல்வி நிறு வனங்கள், தனியார் நிறுவனங்கள், பொது இடங்கள் என அனைத்து இடங்க ளிலும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

இவை அனைத்தையும் ஏற்படுத்து வதோடு மட்டுமல்லாமல், இவை முழுமையாகச் செயல்படுகின்றனவா என்பதையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இவற்றைச் செய்வதில் எவ்விதச் சமரசத்திற்கும் உடன்படாமல் தகுந்த பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

எவ்விதச் சூழலிலும் பெண்கள் மன வலிமையுடன் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்வது தொடர்பாகப் போதிய சட்ட உதவி மற்றும் உளவி யல் சார்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்து வதும் அவசியம். இந்த விழிப்புணர்வை, பெண்களுக்கு அவர்கள் கல்வி பயிலும் காலகட்டத்திலேயே அரசு ஏற்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கி றேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# 67 பேருடன் விபத்திற்குள்ளான அசர்பைஜான் பயணிகள் விமானம்

அசர்பைஜானுக்கு சொந்தமான பயணிகள் விமானம் கசக்ஸ்தானில் நேற்று வீழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

62 பயணிகள் மற்றும் 5 ஊழியர்களை ஏற்றிய விமானம் அசர்பைஜானின் தலைநகரான பாகுவிலிருந்து ரஷ்யாவின் செச்சினியாவிற்கு பயணத்தை ஆரம்பித்தது.





விமானத்தை அவசரமாக தரையிறக்குவதற்கு விமானிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சில நிமிடங்களில் விமானம் விபத்திற்குள்ளானதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து குறித்து கசக்ஸ்தான் மற்றும் அசர்பைஜான் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# விண்வெளியில் சுனிதா வில்லியம்ஸ் நத்தார் கொண்டாடினார்; புதிய சர்ச்சை

சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணியாற்றி வரும் நாசா விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர், சாண்டா தொப்பிகள் அணிந்து நத்தார் பண்டிகை கொண்டாடிய நிகழ்வு சமூக ஊடகங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



நாசா வெளியிட்ட காணொலியில், சுனிதா வில்லியம்ஸ் சிவப்பு சட்டை அணிந்திருப்பதையும், மற்ற வீரர்கள் சாண்டா தொப்பிகளுடன் கிறிஸ்துமஸ் உற்சாகத்தில் ஈடுபட்டிருப்பதையும் காண முடிகிறது.

அதேவேளை, இந்தக் காணொலி பலரிடையே கேள்விகளை எழுப்பியுள்ளது.

8 நாள் பயணமாகக் கடந்த ஜூன் 5 ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்ட இந்த வீரர்கள், தொழிநுட்பக் கோளாறு காரணமாகப் பல மாதங்களாக அங்கேயே தங்கியுள்ளனர்.

அவர்களை மீண்டும் பூமிக்கு அழைத்துவர நாசா அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில்தான் நடவடிக்கை எடுக்கும் என்று கூறியுள்ளது.

8 நாள் பயணத்துக்குத் திட்டமிட்ட நாசா அவர்கள் விண்வெளியில் சிக்குவார்கள் என்று தெரிந்தே டிசம்பரில் வரும் நத்தாருக்கு தேவையான அலங்கார மரம், சாண்டா தொப்பி உள்ளிட்டவற்றைக் கொடுத்து அனுப்பியது எப்படி என்ற கேள்வியைப் பலர் முன்வைக்கின்றனர்.

இந்நிலையில், அந்தக் காணொலிக்கான விளக்கத்தை நாசா வழங்கியுள்ளது.

நாசாவின் தகவலின்படி, நவம்பரில் ஸ்பேஸ்எக்ஸ் விண்கலம் மூலமாகச் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மூன்று தொன் பொருள்கள் அனுப்பப்பட்டன.

இதில் கிறிஸ்துமஸ் மரம், அலங்காரங்கள், பரிசுகள், வான்கோழி இறைச்சி, உருளைக்கிழங்கு, காய்கறிகள், பிஸ்கட் குக்கீகள் உள்ளிட்ட சிறப்பு உணவுப் பொருள்களும் இடம்பெற்றன.

மேலும், பணி சார்ந்த தொழிநுட்ப பொருள்களும் அந்த விண்கலத்தில் அனுப்பப்பட்டதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிகழ்வு, விண்வெளியில் இருந்தாலும் உற்சவங்களைக் கொண்டாடுவதற்கான மனித முயற்சியின் சிறந்த உதாரணமாகப் பார்க்கப்படுவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 26.12.2024

## மேஷம்

மற்றவர்களுடன் பழகும்பொழுது எப்படிப் பழகுகிறீர்கள் என்று கவனத்தில் கொண்டு பழகுங்கள்.பலன்கள் தாமதமாகக் கிடைக்கும்.பொறுமையுடன் இருந்தால் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறலாம்.

பணியைப் பொறுத்தவரை அதிக முயற்சி தேவை.இன்று பணியில்தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவையுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் காதலில் வெற்றி பெறலாம்.இதனால் மோதல்களைக் குறைக்கலாம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இல்லை.இன்று பணத் தட்டுப்பாடு காணப்படும்.அதிக பணம் சம்பாதிக்கும் திறமை குறைந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.தொண்டை சம்பந்தமான எரிச்சல் காணப்படும்.

## ரிஷபம்

இன்று பயணங்கள் ஏற்படலாம்.இன்று பிறருடன் தொடர்பு கொள்வதில் குறைபாடு காணப்படும்.உணர்ச்சி வசப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக காணப்படாது.சக பணியாளர்களிடம் சுமுகமான உறவு நிலை காணப்படாது.

உங்கள் பிரியமானவருடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது.உணர்ச்சி வசப்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்து காதலை மகிழ்ச்சியாக்குங்கள்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய் நேரலாம்.வீண் செலவுகள் ஏற்படலாம்.

பதட்டம் காரணமாக கால்களில் வலி காணப்படும்.ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.

## மிதுனம்

இன்று பொறுப்புகள் அதிகமாகக் காணப்படும்.சௌகரியங்கள் குறைந்து காணப்படும். பொறுமையுடன் கையாண்டால் எதையும் எளிதாக முடிக்கலாம்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருக்கும்.குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் பிரியமானவருடன் மோதல்கள் காணப்படும். நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் குறைந்து காணப்படும்.அதனால் உங்கள்அடிப்படைதேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்க நேரலாம்.இன்று சிறப்பான நாளாக அமையாது.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. அசௌகரியங்கள் மற்றும் செலவுகள் காணப்படும்

## கடகம்

இன்று உங்கள்செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள்விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள்.

இன்று பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான நல்ல வாய்ப்புகளும்இன்று கிடைக்கும்.

உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு காணப்படும். உங்கள் துணையிடம் அன்பான வார்த்தைகளை பரிமாறிக்கொள்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.நீங்கள் நிதிவிஷயத்தில் சுதந்திரமாக விரும்பியதை செய்ய இயலும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்கள்தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

நீங்கள்இன்று பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.மேலும் முக்கியமான பணிகளை ஆற்ற வேண்டியிருக்கும்.எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இருமுறை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது.பணிச்சுமை அதிகமாக இருக்கும்.இது உங்களுக்கு சிறிது பதட்டத்தை உருவாக்கும்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு எழும். ஒற்றுமையை தக்க வைக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

ஆன்மீக பயணம் காரணமாக பணத்தை செலவு செய்வீர்கள்.பணஇழப்பிற்கான வாய்ப்பு இருப்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் தந்தையாருக்கு சுவாசப் பிரச்சினை காணப்படும்.

## கன்னி

இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சிகள்செய்ய வேண்டியிருக்கும். இன்று அதிக சவால்களை சந்திக்க வேண்டியிருக்கும்.என்றாலும் உங்கள் சமயோசித புத்தியினால் உங்கள் செயல்களை நன்கு ஆற்றுவீர்கள்.

இன்று புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.அது உங்களுக்கு புதிய சவாலாக இருக்கும்.இந்தச் சவாலை நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் கருத்து வேறுபாடு காணப்படும்.விஷயங்களை இலேசாக எடுத்துக் கொண்டு உறவினை நல்லுறவாக ஆக்க வேண்டும்.

இன்ற வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். பணம் சேமிப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே உள்ளன.

நீங்கள் சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள்.

## துலாம்

இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும்.உங்களது சூழ்நிலையைக் கண்டு உணரச்சிவசப்படாதீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.

பணிகள் திறம்பட செயலாற்ற இயலாது.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் வேறு வேலையைத் தேடுவீர்கள்.

உங்கள் பிரியமானவருடன் இன்று விவாதத்தில் ஈடுபட நேரலாம்.நிலைமை மோசமாகாமல் தடுக்க அதனை தவிர்ப்பது நல்லது.

நிதிவளர்ச்சி இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. தேவையற்ற கூடுதலான செலவினங்களை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் மருத்துவ செலவிற்காக நீங்கள் செலவு செய்ய நேரும்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.புதிய நபர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.இன்று முழுவதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் இன்று திருப்திகரமான நிலை காண்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள்இன்று காற்றில் பறப்பது போல உணர்வீர்கள்.காதல் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும்.உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.12.2024




இன்று முழுவதும் வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.நல்ல முடிவுகளை எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும்.நீங்கள் கூடுதலான பணிகளை ஆற்ற கடமைப்படுவீர்கள்.

இன்று திருமணம் பற்றிய முடிவு எடுப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளி வைக்கவும்.இன்று உங்கள் பிரியமானவருடன் பேசுவதற்கு உகந்த நாள் கிடையாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு அதை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும்.




இன்று மந்தமான நாள். உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.உங்கள் கவலைகள் அதிகரிக்காமல் இருக்க தேவையற்ற எண்ணங்களை கைவிடுங்கள்.

இன்று பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது.பணியில் அதிக தவறுகள் ஏற்படும்.அது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமை இழப்பீர்கள்.கேள்விப்படும் வதந்திகள் உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.உரையாடும் போது கவனத்துடன் இருக்க வேண்டும்.

இன்று பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணம் கையாள்வதில் சில சிக்கல்களை நீங்கள் உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம்சிறப்பாக இருக்காது.




இன்று முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. புத்திசாலித்தனமாக செயலாற்றுவதன் மூலம் இன்றைய நாளை நீங்கள் உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம்.

பணிசார்நத பயணங்கள்இன்று சாத்தியம்.உங்கள் சகபணியாளர்களிடம் நல்ல உறவுமுறை பராமரிப்பது அவசியம். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது முக்கியம்.

உங்கள் பிரியமானவருடன் உங்கள் உறவை பராமரிக்க விரும்பினாலும் சில சமயங்களில் நீங்கள் மனநிலையை இழப்பீர்கள்.

இன்று பணவிஷயத்தில் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதீர்கள்.நிதி சம்பந்தமான முடிவுகளை அடுத்த நாளிற்கு தள்ளிப் போடுங்கள்.




இன்று பலன் தரும் முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள்.இன்று உறுதியும் தைரியமும் உங்களிடம் காணப்படும்.

சகபணியாளர்களிடம் நட்புமுறையில் பழகுவீர்கள்.பணியில் நல்ல பெயர் எடுப்பீர்கள்.

உங்கள் துணையுடனான பேச்சிலும் செயலிலும் இனிமை காணப்படும். இது உங்கள் உறவுப் பிணைப்பை வலுவாக்கும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும்.இன்று பணத்தை சேமிக்கவும் இயலும்.

இன்று உங்கள்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று அனைத்தும் உங்களுக்கு சிறப்பாக காணப்படுவதால் நீங்கள்ஆரோக்கியமாக இருப்பீர்கள்.





